1981 மே 6]

ஆலந்தூர், பல்லாவரம் கூட்டு குடிநீர் திட்டம்.

*வினா எண். 999—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலாற்றிலிருந்து ஆலந்தூர், பல்லாவரம் ஆகிய இரண்டு நகர சபைகளுக்கும் குடி தண்ணீர் சப்ளைக்காக ரூபாய் 2½ கோடி செலவு செய்யப்பட்டும் இன்றுவரை தண்ணீர் கிடைக்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன ?

(இ) சீக்கிரம் தண்ணீர் கிடைக்க அரசு என்ன ஏற்பாடு செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆலந்தூர், பல்லாவரம் கூட்டு குடி நீர் திட்ட செயலாக்கத்தில் ஏற்பட்ட சில கோளாறுகள் காரணமாக இத்திட்டத்தை முழுமையாக நிறைவேற்ற இயலவில்லை.

(இ) இத் திட்டம் மறுபடியும் புதுப்பிக்கப்பட்டு, அதற்கான வேலைகள் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1982-ஆம் ஆண்டு இறுதியில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இரண்டரைக் கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டும் கூட இதுவரை தண்ணீர் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம், கோளாறு என்று சொன்னார்கள். என்னென்ன கோளாறுகள்? யார் யாரால் செய்யப்பட்டது ? அவர்கள் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீரேற்றுக் குழாயில் நீரேற்றும் போது கசிவு ஏற்பட்டது. W ter w s fou d cozi g out. இதைப் பரிசோதனை செய்ததில் பதிக்கப்பட்ட குழாய் ள் யாவும் பயன் அற்றவை என்று கருதப்பட்டது. இந்தப் பொருள் தற்சமயம் காவல் புலனாய்வுத் துறையின் ஆய்வில் உள்ளது. இப்போது இந்தத் திட்டத்தை, இரும்பு வார்ப்பு குழாயைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யும் வகையில் ரூ. 708 08 இலட்சம் திருத்த மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. வேலை நடக்கிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: இவ்வளவு மோசமான சாமான்கள் எல்லாம் வந்திருக்கிறதே, அதை சப்ளை செய்தது யார்? எதன் அடிப்படையில் வாங்கப்பட்டது? இந்த ஊழல் செய்தவர்களை அல்லது அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீது அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் ஏற்கனவே சொன்னதுபோல், இந்தப் பொருள் தற்சமயம் காவல் புலனாய்வு துறையின் ஆய்வில் உள்ளது. இது நடந்ததெல்லாம் 1972, 1973, 1974-ஆம் ஆண்டுகளில். யார் காலத்தில் இப்படி நடந்தது, யார் பொறுப்பாளி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே ஊகித்துக் கொள்ளலாம்.

திரு. மு. அம்பிகாபதி: இந்தக் குடி நீர் திட்டங்களே கோளாறான திட்டங்களாக இருக்கின்றன. வீராணம் திட்டம் கோளாறு, பாலாறு திட்டம் கோளாறு, ஆக எல்லாம் கோளாறாக இருக்கின்றன. ஆகவே இந்தக் கோளாறுகளை நீக்கி கோளாறு இல்லாமல் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எத்தகைய நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: கோளாறு இருந்த காரணத்தால்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறோம். எனவே நாங்கள் இப்போது கோளாறு இல்லாமல் செய்து கொண்டிருக்கிறோம்.

வால்பாறையில் தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டும் திட்டம்.

*வினா எண். 1000— திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தொழிலாளர் ஓய்வு விடுதி கட்டுவதற்காக தொழிலாளர்கள் நல வாரியம் திட்டமிட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் வால்பாறையில் தொழிலாளர்களுக்காக ஓய்வு விடுதி கட்ட தீர்மானித்துள்ளது. அதற்காக நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) விடுதி கட்டுவதற்காக இடம் கிடைத்ததும், அதற்கான வரைபடம் மற்றும் மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு, பின்னர் கட்டிட வேலை துவக்கப்படும்.